

குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (11.5.2023) சென்னை, கிண்டி, சிட்கோ தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 208 தொழில்முனைவோர்களுக்கு பட்டா வழங்கினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் வி. அருண்ராய், சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி.சோ. மதுமதி, தொழில் வணிக கூடுதல் ஆணையர் திருமதி கிரேஸ் லால்ரிண்டிக்கி பச்சாவ் ஆகியோர் உள்ளனர்.

# இஸ்ரேல் ராணுவம் மீண்டும் துப்பாக்கி சூடு!

## 2 பயங்கரவாதிகள் உயிரிழப்பு!

ஜெருசலேம்,மே.12-

இஸ்ரேல் ராணுவம் மீண்டும் நடத்திய துப்பாக்கி சூட்டில், 2 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் பாலஸ்தீனம் இடையேயான மோதல் நீண்ட காலம் நடந்து வரும் நிலையில் சமீப காலமாக அது தீவிரம் அடைந்து வருகிறது. அந்தவகையில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு பகுதியான மேற்குகரை நகரத்தில் பாலஸ்தீன ஆயுத போராளிகள் பலர் பதுங்கி இருப்பதால் அவர்களை களையும் நடவடிக்கையாக கருதி ஒரு வருடமாக அங்கு இஸ்ரேல் ராணுவம் தீவிர சோதனை நடத்தி வருகிறது. அதன்படி கடந்த 2 நாட்களுக்கு முன்பு காசா நகரத்தில் உள்ள ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினர் பதுங்கி இருந்த இடங்களில் இஸ்ரேல் ராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியது. இதனால் அங்கு பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் மேற்குகரை பகுதியில் நேற்று மீண்டும் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் பாலஸ்தீன பயங்கரவாதிகள் 2 பேர் உயிரிழந்ததாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் கிழக்கு பகுதி சார்பில் திராவிட மாடல் அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் பகுதி கழகச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எழுத்தாளரும், கழக செய்தி தொடர்பாளருமான மனுஷ்ய புத்திரன் சிறப்புரையாற்றினார். உடன் ஆதிமாறன், பொன் சதாசிவம், இ.எம்.சாம்சன், டி.ராஜாராம், ரா.நவீன், ஆர்.பன்னீர்செல்வம், எஸ்.வேலவன், ராமதேவி செந்தில்குமார், எம்.சாந்தகுமார், எம்.பெருமாள், எம்.கே.மோகரைஸ்கான் மற்றும் கழக முன்னணியினர், பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். எம்.செந்தில்குமார் நன்றி உரை ஆற்றினார்.

### தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டை மனை ஒதுக்கீட்டுதாரர்களின்

# கோரிக்கையினை நிறைவேற்றும் விதமாக தொழில் மனைகளுக்கு பட்டா!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் 208 தொழில்முனைவோர்களுக்கு வழங்கினார்!

சென்னை, மே 12-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (11.5.2023) சென்னை, கிண்டி, சிட்கோ தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 208 தொழில் முனைவோர்களுக்கு பட்டா வழங்கி பேசியதாவது:-

“1970ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதல்வராக இருந்தபோது, குறு, சிறு, நடுத்தர தொழில் புரிவோருக்காக சிட்கோ தொழிற்பேட்டைகளை உருவாக்கினார். தமிழகம் முழுவதும் 14 ஆயிரத்து 983 தொழில் மனைகளுடன் 127 தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன.

இந்த 127 தொழிற்பேட்டைகளில் 60 தொழிற்பேட்டைகளில் உள்ள 3,700 ஏக்கர் நிலம் அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் இருப்பதால், தொழில் நிறுவனங்கள் கிரைய பத்திரம் பெற்றிருந்தாலும், பட்டா பெற முடியாத நிலை நீண்ட காலமாக இருந்து வந்தது. இதனால், தொழில்முனைவோர்கள் நிலத்தினை வைத்து கடன் பெறுவதும், தொழிலை விரிவுபடுத்தவும் முடியாமல் பல சிக்கல்களை சந்தித்து வந்தனர். கழக அரசு பொறுப்பேற்றவுடன், இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென அரசிடம் தொழில்முனைவோர்கள் கோரிக்கை வைத்தனர். தொழில் துறையின் மீது எப்போதும் தனிகவனம் செலுத்தி வரும் முதல்வர் அந்த கோரிக்கைகளின் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, நில வகைப்பாட்டினை மாற்றிட 30.11.2021 அன்று தலைமைச் செயலர் தலைமையில் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவினை (Empower Committee) அமைக்க உத்தரவிட்டார்கள்.

இக்குழு, முதல்கட்டமாக 32 தொழிற்பேட்டைகளில் 1,569 ஏக்கர் நிலங்களுக்கான வகைப்பாட்டினை மாற்றி, பட்டா வழங்க பரிந்துரைத்து அரசாணைகள் வெளியிடப்பட்டு உள்ளது. இதனடிப்படையில், 1,245 ஏக்கர் நிலம் பட்டா வழங்குவதற்காக தமிழ்நாடு சிட்கோ பெயரில் நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, 28.3.2023 அன்று தலைமை செயலகத்தில் நடைபெற்ற விழாவில் கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டையை சேர்ந்த 5 தொழில்முனைவோருக்கு முதல்வர் தனது திருக்கரங்களால் பட்டா வழங்கி திட்டத்தை தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக, இன்று 9 தொழிற்பேட்டைகளில் உள்ள 280 தொழில் முனைவோர்களுக்கு 70 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்திற்கான பட்டா வழங்கப்பட்டு உள்ளது. ஏனையோர்க்கு படிப்படியாக பட்டா வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான இரு பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும், சிட்கோ தொழிற்பேட்டையில் சுகாதார பணிகளை மேற்கொள்ளும் 25 தூய்மை பணியாளர்களுக்கு சீருடையும் அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் வி.அருண்ராய், சிட்கோ, மேலாண்மை இயக்குநர் திருமதி சோ. மதுமதி, தொழில் வணிக கூடுதல் ஆணையர் திருமதி கிரேஸ் லால்ரிண்டிக்கி பச்சாவ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### நீண்ட கால கோரிக்கையான

# ‘அகில இந்திய வானொலி’ என பெயர் மாற்ற சரியான தருணம்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, மே 12-

மக்களின் நீண்ட கால கோரிக்கையான ‘அகில இந்திய வானொலி’ என பெயர் மாற்ற இதுவே சரியான தருணம் என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து 11.5.2023 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-



தலையங்கம்

தினத்தந்தி

11.5.2023 (வியாழக்கிழமை)

வானொலி என்று சொல்ல வேண்டும்

தமிழக மக்கள் இந்தி திணிப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்தி எதிர்ப்பு என்பது இன்று நேற்றல்ல, நீண்ட பல ஆண்டுகளாகவே தமிழக மக்களின் ஊனோடும், உதிரத்தோடும் கலந்தது. பெரியார் 1938-ம் ஆண்டே இந்தியை எதிர்த்து சென்னையில் போராடி 18 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அந்தாண்டிலேயே போராட்டத்தில் ஈடுபட்டு சிறைசென்ற தாளமுத்து, நடராஜன் ஆகியோர் சிறையிலேயே உயிர்நீத்தார்கள். 1965-ம் ஆண்டு நடந்த போராட்டத்தில் 4 பேர் தீக்குளித்து உயிரிழந்தனர்.

இந்தி திணிப்புக்காக மாணவர்கள் போராட்டம் மாநிலம் முழுவதும் வலுத்தது. இந்த ஒரே காரணத்துக்காக 1967-ல் நடந்த சட்டமன்ற தேர்தலில் தோல்வியை தழுவி ஆட்சியை இழந்த காங்கிரஸ் கட்சி,

தமிழ்நாடு மக்கள் இந்தி திணிப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்தி எதிர்ப்பு என்பது இன்று நேற்றல்ல, நீண்ட பல ஆண்டுகளாகவே தமிழக மக்களின் ஊனோடும், உதிரத்தோடும் கலந்தது.

பெரியார் 1938ம் ஆண்டே இந்தியை எதிர்த்து சென்னையில் போராடி 18 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அந்தாண்டிலேயே போராட்டத்தில் ஈடுபட்டு சிறைசென்ற தாளமுத்து, நடராஜன் ஆகியோர் சிறையிலேயே உயிர்நீத்தார்கள்.

1965ம் ஆண்டு நடந்த போராட்டத்தில் 4 பேர் தீக்குளித்து உயிரிழந்தனர். இந்தி திணிப்புக்காக மாணவர்கள் போராட்டம் மாநிலம் முழுவதும் வலுத்தது. இந்த ஒரே காரணத்துக்காக 1967ல் நடந்த சட்டமன்ற தேர்தலில் தோல்வியை தழுவி ஆட்சியை இழந்த காங்கிரஸ் கட்சி, இன்றளவும் ‘ஆட்சி அமைப்போம்’ என்று கனவுகூட காண முடியவில்லை.

சமீபத்தில் ரெயில்வே தேர்வு ஆங்கிலம் மற்றும் இந்தியில்தான் எழுதமுடியும் என்ற நிலைக்கு வந்தபோது, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எதிர்ப்பு தெரிவித்து தமிழையும் சேர்க்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்ததால், ஒன்றிய அரசின் அனைத்து பணிகளுக்குமான தேர்வை தமிழ் உள்பட 13 பிராந்திய மொழிகளிலும் எழுதலாம் என்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் இந்தி திணிப்பு என்பது தேன் கூட்டில் கை வைப்பது போலாகும். அதுபோன்ற நிலை இப்போதும் வந்துவிடுமோ? என்ற அச்சத்தை ஒன்றிய அரசாங்கம் பிறப்பித்துள்ள உத்தரவு ஏற்படுத்தியுள்ளது.

மக்களோடு தகவல் பரிமாற்றத்தில் ‘ஆல் இந்தியா ரேடியோ’வின் சேவை மிக முக்கிய பங்காற்றுகிறது. என்னதான் டெலிவிஷன் வந்துவிட்டாலும், ரேடியோ சேவை மக்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கு, மீனவர்களுக்கு என்று பல தரப்பினருக்கும் அனைத்து செய்திகளையும், வழிகாட்டுதல்களையும் அளித்து வருகிறது. தனியார் எப்.எம். சேவைகளோடு ஒன்றிய அரசாங்க தகவல் ஒலிபரப்புத்துறை கட்டுப்பாட்டிலுள்ள ‘ஆல் இந்தியா ரேடியோ’ சேவை மக்களை ஈர்த்துள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி ஆகிய நகரங்களில் இருக்கும் ரேடியோ நிலையங்கள் சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தே செய்திகளை ஒலிபரப்பு செய்துவருகிறது. “ஆல் இந்தியா ரேடியோசென்னை, செய்திகள் வாசிப்பது...” என்றே கூறிவருகிறார்கள்.

மக்கள் நீண்ட காலமாகவே வானொலி நிலையம் என்று தமிழில் கூற போராடி வந்திருக்கிறார்கள். 1957ம் ஆண்டில் இருந்தே ‘ஆகாஷ்வாணி’ என்ற இந்தி பெயரை பயன்படுத்த முயற்சி நடந்தது. அப்போதே முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவ நாதம் தொடங்கி பலர் எதிர்ப்பு தெரிவித்தனர். 1967ல் அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுத்து ‘ஆகாஷ் வாணி’ திணிப்பை திரும்பப்பெற வைத்தார். மீண்டும் பிறப்பிக்கப்பட்ட ஆணையை 1982ல் பிரதமர் இந்திராகாந்தி ரத்து செய்தார்.

‘ஆல் இந்தியா ரேடியோ’ என்று கேட்டு பழகிவிட்ட மக்களுக்கு, பேரிடியாக இனி ‘ஆகாஷ்வாணி’ என்ற இந்தி பெயரைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று ஒன்றிய அரசாங்கம் பிறப்பித்த உத்தரவு விழுந்தது. உத்தரவு வந்த ஓரிரு நாட்கள் ‘ஆகாஷ்வாணி’ என்று ஒலிபரப்பப்பட்டது. ஆனால், மக்களின் எதிர்ப்பு காரணமாக அது நிறுத்தப்பட்டு, ரேடியோ நிலையம் சார்பில் தலைமையகத்துக்கு எழுதப்பட்டுள்ளது. முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சார்பில் ஒன்றிய மந்திரியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆல் இந்தியா ரேடியோவை ‘ஆகாஷ்வாணி’ என்று பெயர் மாற்றம் செய்ய துடிக்கும் மத்திய அரசாங்கம், தமிழ்நாட்டின் நீண்டகால கோரிக்கையான ‘அகில இந்திய வானொலி’ என்று பெயர் மாற்றம் செய்ய இதுவே சரியான தருணம்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், மீஞ்சூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் டாக்டர் கா.சு.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் – கழக சுற்றுச் சூழல் அணி துணைச் செயலாளர் சாய், ஜெயகாந்த் பாரதி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. - க. செல்வம் எம்.பி. சிறப்புரை!

# உத்திரமேரூர் ஒன்றிய - பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், மே 12 -

உத்திரமேரூர்ஒன்றிய - பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை நடைபெறுகிறது. இதில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கி பேசுகிறார். இது குறித்து ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

திராவிட நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய ஆணைக்கிணங்க காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் கழக பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் வாக்குச்சாவடி பாகநிலை முகவர்கள் மற்றும் பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (13- 5 - 2023 சனிக்கிழமை) காலை 10:30 மணி அளவில் உத்திரமேரூர் இந்திராணி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. பேரூர் கழகச் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல் வரவேற்கிறார்.

ஒன்றிய அவைத் தலைவர் தா.சுப்பராயன், பேரூர் அவைத் தலைவர் து.ரமேஷ் ஆகியோர் தலைமை தாங்கிட, எஸ்.ருத்திரகோட்டி, சு.சுகுணாசுந்தர்ராஜன், ஏ.எம்.கெங்கன், தே.பாபு, டி.எஸ்.குமார்தேவ், இரா.கார்த்திகேயன், க.மாயகிருஷ்ணன், இ.வீரமணி, பி.மகேந்திரன், ஆ.ஜெயகாந்தா, க.அப்துல்ஹக்கிம், வெ.கோவிந்தராஜ், வெ.குணசேகரன், கே.கண்ணாயிரம், மா.கருணாநிதி, ந.ராஜேந்திரன், ஏ.செல்லமுத்து வி.ராஜபாண்டி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் க.செல்வம் எம்.பி., கழக சட்டத் துறை துணைச் செயலாளர் ஜெ.பச்சையப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் இரா.நாகன், சாலவாக்கம் ஒன்றியச் செயலாளர் டி.குமார், பேரூராட்சித் தலைவர் பொ.சசிகுமார், ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா ஞானசேகரன், ஒன்றியகுழு துணைத் தலைவர் வசந்தி குமார், மா.ஏழுமலை, பா.பத்மா, இளமதிகோவிந்தராஜ், கோ.காளிதாஸ், ஏ.கே. இரமேஷ்பாபு, டி.கே.கோபாலகிருஷ்ணன் த.விநாயகம், Dr.வா.திவாகர் கே.தயாளன் எம்.டி.பிலோதாமஸ், எ.மூர்த்தி, து.சுந்தர், மு.தாமோதரன் ஆ.நீலகண்டன் ஒன்றிய குழு உறுப்பினர்கள், பேரூர் வார்டு உறுப்பினர்கள் : சே.பானுமதி, வெ.திருமலை, ஆ.அண்ணாதுரை, மா.வீரம்மாள், உ.கலைச்செல்வி. ந.அறிவழகன், க.வெங்கடேசன், கு.நரசிம்மபாரத், தமிழரசிபாபு கி.தனசேகரன், சிங்காரிசிவா, கவிதாசிகுமார், மைவிழிச்செல்விமனோகரன், நா.உதயசூரியன், பெ.பரணி, ரத்தினா பாஸ்கர்

ஒற்றிய பேரூர் இளைஞர் அணி கு.வரால், த.கார்த்திக், ஜி.கோபிநாதன், ஞா.ஆதிநாராயணன், கு.சரவணன், அ.அருண்குமார், வி.சுரேஷ், பி.வி.அன்புராஜா பெயரணி, த.அஸ்வின்ராஜ், மு.விஜய் ஒன்றிய பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் கோ.தவனகிரி, த.முனி ரத்தினம், பொ.பெருமான், மு.பத்மநாபன், கா.வெங்கடேசன், வே.ஆறுமுகம், ஜி.பி.அருள்ராஜ் எஸ்.ஞானமணி, பி.தட்சிணாமூர்த்தி, பி.கன்னியப்பன், க.வீரப்பன், வேயாலாஜி, இ.மலர்விழி, இரா.பன்னீர்செல்வம், கி.தனசேகரன், வெ.கிருஷ்ணமூர்த்தி , எல்லப்பன், வி.பாபு, காபு, ந.பாலசுப்பிரமணியன், ச.மரகதம், இரா.பிரசன்னா, கரிகாலன், க.கன்னியப்பன், ரா.அரசகுமார் ஊராட்சி மன்ற தலைவர்கள்: மு.தமிழ்மொழி, உ.கீதா, ந.ராதா, மா.தேவன் வே.மங்கை, வ.மங்கள கௌணி, பி.அருன்ராஜ் அ.மரகதம், ஏ.மூர்த்தி நீ.புனிதவள்ளி, சொ.முருகேசன், வி.வெங்கடேசன். மு.மகேஸ்வர், வ.கிருஷ்ணவேணி கோ.பச்சை யப்பன், எ.சத்யா, பெ.சரஸ்வதி க.பிரதாப், வி.லட்சுமி, விஸ்வநாதன், ரா.சாமுண்டீஸ்வரி, ரீட்டா, சி.சாந்தி, தா.கலையரசி, ச.சாந்தி, வெ.சாந்தி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் , பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### பகுதிச் செயலாளர் வை.ம.அருள்தாசன் தலைமை! மாதவரம் எஸ்.சுதர்சனம் பங்கேற்பு!

# திருவொற்றியூர் மேற்கில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, மே 12-

சென்னை வட கிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் 8.5.2023 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் 6வது வட்டம் கலைஞர் நகர் பகுதியில் நடைபெற்றது.

இந்த மாபெரும் பொதுக்கூட்டம் பகுதிக் கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், மாவட்ட பொருளாளர் எம். ஆனந்தன் வரவேற்புரையாற்ற வட்ட செயலாளர்கள் கி.கண்ணன், பவுல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர் சிறப்புரையாற்றினார். சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் மற்றும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மத்திய பகுதி செயலாளர் மண்டல குழுத்தலைவர் ஏ.வி.ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற இக்கூட்டத்தில் பேசிய சிறப்பு பேச்சாளர் உள்ளிட்ட அனைவரும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விரிவாக எடுத்துக்கூறினர். இதில் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் என்.திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ். குறளரசன், ஏ.இந்துமதி, எம்.வஜ்ரவேல், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மு.சிவகுமார், கே.பி.சொக்கலிங்கம் கலந்து கொண்டனர்.

வி.கண்ணதாசன், மிசா மதிவாணன், வி.இராமநாதன், வி.கவி கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகி, இரா.முருகேசன், டி.ஏ.ராஜு, பி.சாந்தி, எஸ்.நந்தகோபால், கே.பரந்தாமன், ஜெ.ஜெயமதன், ஜீ.துக்காராம், புழல் எம்.நாராயணன், பி.சரவணன், ஜி.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.தினேஷ்குமார், எஸ்.கணேஷ், ஆர்.மோகனசுந்தரம், எஸ்.ஆர்.மலைராஜ், எஸ். மகேந்திரன், எம்.சந்திரகுமார், ஜி.தினேஷ், என்.ராம்குமார், வி.வீரமுத்து, ஈ.வி. சரவணன், பொன் கோவிஜயன், எஸ்.ஆறுமுகம், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் வி. தியாகராஜன் நன்றி கூறினார்.




சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்கு பகுதி சார்பில், விருகம்பாக்கத்தில் கழக அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் 128 வது மாமன்ற உறுப்பினரும், கழக மகளிர் அணி சமூக வலைத்தள பொறுப்பாளருமான திருமதி. ரத்னா லோகேஸ்வரன், எம்.சி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணை செயலாளரும், எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஐ. பரந்தாமன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி 1000 மகளிர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க. தனசேகரன், கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் கே.கண்ணன், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ்.டி.தங்கராசன், பி.எஸ்.முருகேசன், எஸ்.ஏ.ஹரிகிருஷ்ணன் மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், வட்ட கழக செயலாளர்கள் மு. கோவிந்தராஜ், வி.ஏ.ராஜா, எஸ்.மைக்கேல், எஸ். பாஸ்கரன், ஆர்.பாபு மற்றும் வட்ட கழக, பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எஸ்.ஜே. சாதிக்பாட்சா

## மே 12 (1994)



**தி.மு.க. பொருளாளராக 1977ஆம் ஆண்டு முதல் பொறுப்பு வகித்தவர். அண்ணா, கலைஞர் அமைச்சரவைகளில் அமைச்சராகப் பணியாற்றியவர்.**

**சட்டமன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**“கழகத்தின் வெற்றியிலும் – தோல்வியிலும் – சோதனையிலும், சாதனையிலும் – கொடிய வெயிலிலும், நிழலிலும் கூடவே இருந்து அசையாத மலையாக எதற்கும் ஊசலாடாத இதயத்துடன் நமக்கு துணையாக இருந்த தங்கத்தூண் சாய்ந்து விட்டதே” என தலைவர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**1986ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில், இவருக்கு கலைஞர் விருது வழங்கி சிறப்பித்தார் கலைஞர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**